

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மறைந்த முன்னாள் அமைச்சர் க.சுந்தரம் – பொன்னேரி நகர மன்ற தலைவர் டாக்டர் பரிமளம் விஸ்வநாதன் ஆகியோரின் பேரனும் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளருமான க.சு.தமிழ் பிரியன் – தாரா ஆகியோரின் ஆண் குழந்தைக்கு திராவிடச் செல்வன் என பெயர் சூட்டினார். உடன் மீஞ்சூர் பேரூர் கழக செயலாளர் க.சு.தமிழ் உதயன், டாக்டர் க.சு.செந்தில் உள்ளனர்.

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்

# அரியலூர் மாவட்டப் பொருளாளர் வீர.புகழேந்தி தலைமையில் ம.தி.மு.க. நிர்வாகிகள் கழகத்தில் இணைந்தனர்!



சென்னை, ஜூலை 5 -

கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் அரியலூர் மாவட்டம் ம.தி.மு.க.வைச் சேர்ந்த அரியலூர் மாவட்ட பொருளாளர் வீர.புகழேந்தி தலைமையில் மாவட்ட துணைச் செயலாளர்கள் கோ.பழனிவேல் உள்ளிட்ட ஜெயங்கொண்டம் நகர நிர்வாகிகள் - வார்டு செயலாளர்கள் தி.மு.க.வில் இணைந்தனர்.

கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், நேற்று முன்தினம் (3.7.2026) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், ம.தி.மு.க.வைச் சேர்ந்த அரியலூர் மாவட்டம், மாவட்ட பொருளாளர் வீர.புகழேந்தி அவர்கள், தலைமையில் ம.தி.மு.க.வைச் சேர்ந்த மாவட்ட துணைச் செயலாளர் கோ.பழனிவேல், மாவட்ட இலக்கிய அணி துணைத் தலைவர் அ.ஜாகிர்உசேன், நகர துணைச் செயலாளர் இளங்கோவன், ஜெயங்கொண்டம் ஒன்றிய துணைச் செயலாளர் எ.இரவி, ஜெயங்கொண்டனம் நகரம், வட்டச் செயலாளர்கள் நெடுஞ்செழியன், வேல்முருகன், ஜெயங்கொண்டம் நகர இளைஞர் அணி புருசோத்தமன், நகர மாணவர் அணி ராஜா ஆகியோர் தி.மு.க.வில் இணைந்தனர்.

அதுபோது, கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், அரியலூர் மாவட்ட செயலாளர் - முன்னாள் அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், ஜெயங்கொண்டம் நகரச் செயலாளர் வெ.கொ.கருணாநிதி ஆகியோர் உடனிருந்தனர்.

# நீட் மறு தேர்விலும் குளறுபடி நடந்துள்ளது அம்பலம்!

புதுடெல்லி, ஜூலை 5-

நீட் மறு தேர்விலும் குளறுபடி நடந்துள்ளது அம்பலமாகி உள்ளது. அதன்படி, இயற்பியல் வினாத்தாளில் இரண்டு கேள்விகளில் தவறு நடந்துள்ளது தற்போது தெரியவந்துள்ளது.

கடந்த ஜூன் 21ஆம் தேதி நீட் மறு தேர்வு நடைபெற்றது. இந்நிலையில், இயற்பியல் வினாத்தாளில் இரண்டு கேள்விகளில் தவறு நடந்துள்ளது தற்போது தெரியவந்துள்ளது.

இதையடுத்து தேசிய தேர்வு முகமை 40வது கேள்வியை முழுமையாக நீக்கி உள்ளது. மற்றொரு கேள்வியான 22 ஆம் எண் கேள்விக்கு இரண்டு சரியான பதில் கொடுக்கப்பட்டுள்ளது. இதனால் இரு விடைகளுக்கும் மதிப்பெண் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. சரியான பதில் எதுவும் வழங்காத கேள்வி நீக்கப்பட்டுள்ளது.

இதனால், தேர்வு எழுதிய அனைத்து மாணவர்களுக்கும் அந்த கேள்விக்கு 4 மதிப்பெண்கள் வழங்கப்படும்.

மற்றொரு கேள்வியில் இரண்டு பதில்கள் சரியானவை என அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த கேள்வியில் சரியான இரண்டு பதில்களில் ஏதேனும் ஒன்றைத் தேர்வு செய்த மாணவர்களுக்கு மட்டுமே மதிப்பெண் வழங்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது.



சென்னை வடக்கு மாவட்டம், பெரம்பூர் தெற்குப் பகுதி,44வது வட்டச் செயலாளரும், (தொ.மு.ச) சென்னை போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்க மாநகர் பொதுச் செயலாளருமான,பெரம்பூர் த.ஆறுமுகம் இளைய மகள் ஆ.தமிழ் பொன்னிகு.விக்னேஷ் திருமண நிச்சயதார்த்த நிகழ்ச்சியில்,கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கலந்து கொண்டு வாழ்த்தினார். அண்ணா அறிவாலய மேலாளர் பத்மநாபன், கழகத் தொழிலாளர் அணிச் செயலாளர் பி.டி.சி.ஜி.செல்வராஜ், துணைச் செயலாளர் பி.டி.சி.வெ.பாலு,பெரம்பூர் தெற்குப் பகுதிச் செயலாளர் க.ஜெயராமன்,வடக்குப் பகுதிச் செயலாளர் அ.முருகன், மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.ஆர்.கமலகண்ணண்,பொதுக் குழு உறுப்பினர் அ.தமிழ்செல்வன், பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.நரேந்திரன், சர்ப ஜெய தாஸ் எம்.சி.,நா.சேகர், சங்கப் பொருளாளர் எம்.பெருமாள், வட்டச் செயலாளர்கள் எஸ்.அருள், கி.தினகரன், ஏ.ஆர்.ஆர்.மலைச்சாமி எம்.சி., க.பாபு, வி.முருகன்,சி.ராஜன், முரசொலி.ஜி.மாரிமுத்து, கேபிள் கே.ஈ.செந்தமிழரசு,இரா.அரிதாஸ், என்.கார்த்திபன்,கே வி.ராஜன்,வட்ட தலைவர் வி.மணி, பில்டர் பி. ரவி,புல்லட் கிருஷ்ணன் மற்றும் பலர் வாழ்த்தினர்.



சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவரும், கழக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் தி.மு.க பொதுச் செயலாளர் துரைமுருகன் – சாந்தகுமாரி அவர்களின் பேத்தி – வேலூர் வடக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் கதிர் ஆனந்த் எம்.பி. – சங்கீதா ஆகியோரின் மகள் திருமண நிச்சயதார்த்த விழா அழைப்பிதழை வழங்கி வாழ்த்துப் பெற்றனர்.

## சோஃபா மாடல் அரசின் அராஜகப் போக்கு!

# முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் கைது!

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கண்டனம்!

**சென்னை, ஜூலை 5-**

**முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ. கைது செய்யப்பட்டுள்ளதைக் கண்டித்து சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-**



முன்னாள் அமைச்சர் அண்ணன் அனிதா ராதாகிருஷ்ணன் அவர்களை காவல்துறை கைது செய்துள்ளதை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

தமிழ்நாடெங்கும் சீர்கெட்டு போயிருக்கும் சட்டம் ஒழுங்கை மீட்டெடுக்கக் காட்டாத வேகத்தை, எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினரை கைது செய்வதில் காட்டியிருக்கிறது #SofaModel அரசு.

அவதூறு பேசி பொய் பழிகளை அள்ளி வீசுவது மட்டும் தான் அரசியல் என்று செயல்படும் ஆளுங்கட்சியின் இந்த அராஜகப் போக்கை மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

பொய் வழக்காலும் கைது நடவடிக்கைகளாலும் கழகத்தை முடக்கலாம் என்று நினைக்கும் இந்த Reels அரசின் எண்ணம் ஒருபோதும் நிறைவேறாது.

இவ்வாறு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

## சொந்தக் கட்சிக்காரர்களிடமே பகல் கொள்ளையடிக்கும் கமிஷன் அரசு!

# கிழிந்து தொங்கும் த.வெ.க.வின் ஊழல் முகமூடி!

## தி.மு.க. ஐ.டி.விங் கண்டனம்!

சென்னை, ஜூலை 5-

என் ஆட்சியில் லஞ்சம் இருக்காது, ஊழல் இருக்காது! நான்தான் இந்த ஆட்சியின் ஒற்றைப் பவர் சென்டர் என்று கேமரா முன்னால் நின்று வீராவேசமாக ரீல்ஸ் விட்ட பொம்மை CM விஜய்யின் யோக்கியதை, இன்று உயர் நீதிமன்றப் படியேறி வீதிக்கு வந்து சந்தி சிரிக்கிறது!

அரசு வழக்கறிஞர் பதவிகளுக்கு 5 லட்சம் முதல் 30 லட்சம் வரை பகிரங்கமாக லஞ்சம் வாங்கிக்கொண்டு, சந்தையில் காய்கறி விற்பது போல அரசுப் பதவிகளை ஏலம் விடுவது வேறு யாருமல்ல, தவெகவின் தலைவருக்கு அடுத்த இடத்தில் இருக்கும் பொதுச் செயலாளரான அமைச்சர் ஆனந்தும், மாவட்டச் செயலாளர்களும்தானாம்!

இதைச் சொல்வது எதிர்க்கட்சிகள் அல்ல, சொந்தத் தவெக கட்சியின் வழக்கறிஞர் அணி நிர்வாகியே உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்து முகத்திரையைக் கிழித்துள்ளார்.

மேடையில் மட்டும் தூய சக்தி நாடகம், ஆனால் திரைக்குப் பின்னால் கட்சியின் பொதுச்செயலாளர் தொடங்கி மாவட்டச் செயலாளர்கள் வரை அத்தனை பேரையும் கமிஷன் ஏஜெண்டுகளாக மாற்றி லட்சக்கணக்கில் பதவி பேரம்!

அரசுப் பதவிக்காகத் தன் சொந்தக் கட்சிக்காரர்களிடமே இரக்கமில்லாமல் லஞ்சம் பிடுங்கும் இந்த பித்தலாட்டக் கும்பல், எந்தப் பின்புலமும் இல்லாத சாதாரணப் பொதுமக்களிடம் ஒரு வேலைக்கு எவ்வளவு கமிஷன் கேட்பார்கள்?

ஊழல் வழக்குகளில் சிக்கிய பெருச்சாளிகளுக்கெல்லாம் வாஷிங் மெஷினாக மாறி அடைக்கலம் கொடுப்பதில் தொடங்கி, இன்று நேரடியாக லஞ்சம் வாங்கிக் கொண்டு அரசுப் பதவிகளை விற்கும் அளவுக்குத் தரம் தாழ்ந்து நிற்கும் இந்தத் தவெகவை, இனிமேல் தமிழ்நாட்டைச் சூறையாட வந்த ஊழல் சக்தி என்றுதான் இனி அழைக்க வேண்டும் என தி.மு.க. ஐ.டி.விங் தெரிவித்துள்ளது.

# அரசு நாற்றங்கால் பண்ணையில் கிழிந்து தொங்கும் பசுமை வலை!

## அரசின் அலட்சியத்தால் மரக்கன்றுகள் பாதிப்பு!

மதுராந்தகம். ஜூலை 5–

வெள்ளபுத்தூர் அரசு நாற்றங்கால் பண்ணையில் கிழிந்து தொங்கும் பசுமை வலையால் மரக்கன்றுகள் சேதம் அடைந்து பாதிப்பு ஏற்படும் அவல நிலையில் உள்ளது. செங்கல்பட்டு மாவட்டம், அச்சிறுப்பாக்கம் ஒன்றியம், வெள்ளபுத்தூர் ஊராட்சியில் செயல்பட்டு வரும் அரசு நாற்றங் கால் பண்ணையில் அமைக்கப்பட்டுள்ள பசுமை நிழல் வலை பல இடங்களில் கிழிந்து சேதமடைந்துள்ளது. இதன் காரணமாக அங்கு வளர்க்கப்பட்டு வரும் பல்வேறு வகையான மரக்கன்றுகளின் வளர்ச்சி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

அரசின் பசுமைத் திட்டங்களுக்காகவும், பொதுமக்கள் மற்றும் விவசாயி களுக்கு விநியோகம் செய்வதற்காகவும் இந்த நாற்றங்கால் பண்ணையில் மா, பலா, வேம்பு, புங்கன், தேக்கு, பூவரசு உள்ளிட்ட பல்வேறு ரகத்தில் ஆயிரக்கணக்கான மரக்கன்றுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. ஆனால், பசுமை நிழல் வலை நீண்ட நாட்களாக சேதமடைந்த நிலையிலேயே இருப்பதால், நேரடி வெயில், மழை மற்றும் பலத்த காற்றின் தாக்கத்தால் மரக்கன்றுகள் வாடும் நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும், கிழிந்துள்ள நிழல் வலை வழியாக பறவைகள் மற்றும் கால்நடைகள் நுழைந்து மரக்கன்றுகளுக்கு சேதம் விளைவிக்கும் அபாயமும் நிலவுகிறது. இதனால் அரசின் மரக்கன்று உற்பத்தி மற்றும் விநியோகப் பணிகளும் பாதிக்கப்படும் சூழல் உருவாகியுள்ளது. எனவே, சேதமடைந்துள்ள பசுமை நிழல் வலையை உடனடியாக சீரமைத்து அல்லது புதிதாக அமைத்து, அரசு நாற்றங்கால் பண்ணையில் உள்ள மரக்கன்றுகளை பாதுகாக்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் மற்றும் விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.




சூலூர் எஸ்.ஆர்.எஸ் திருமண மண்டபத்தில் பாவேந்தர் பேரவை ஐம்பெரும் விழா மற்றும் சூடு மாறாது சூரியனுக்கு எனும் மாபெரும் கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் கழக துணைப் பொதுச் செயலாளர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர், முன்னாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா கருத்துரையாற்றினார். இதில் மாநில கல்வியாளர் அணி தலைவர் புலவர் செந்தலை ந.கௌதமன் எழுதிய பேச வைத்த பெரியார் நூலை ஆ.இராசா வெளியிட கோவை தெற்கு மாவட்டக் கழக செயலாளர் தளபதி முருகேசன் முதல் பதிப்பை பெற்றுக்கொண்டார். உடன் வால்பாறை சட்டமன்ற உறுப்பினர் குட்டி (எ) ஆ.சுதாகர், மாநகர் மாவட்டப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன், சூலூர் தெற்கு ஒன்றிய செயலாளர் மன்னவன், தலைமை செயற்குழு உறுப்பினர் இருகூர் சந்திரன், சூலூர் பேரூராட்சி தலைவர் தேவி மன்னவன், திராவிட இயக்கத் துணை பொது செயலாளர் சிற்பி செல்வராஜ் உள்பட பாவேந்தர் பேரவை நிர்வாகிகள், மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், பகுதி கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், இந்நாள், முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.